[1979 ஏப்ரல் 27

இ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகளை எடுத்துக்கொள்வது குறித்து.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, நாளைக்கு சட்ட மன்றக் கூட்டம் முடிய இருக்கிறது. நாங்கள் நூற்றுக்கணக்கான கேள்விகளைக் கொடுத்திருக்கிறோம், அதைப்பற்றிக்கூட இங்கே கேட்கக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் நாளைக்கு அதை வைத்திருக்கிறேன். கடைசி நாளன்று அந்த வாய்ப்புகள் தருவது உண்டு. இதற்கு முன்னால் நடவடிக்கைக் குறிப்புகளைப் பார்த்தால் அப்படி இல்லை என்பது தெரியும். ஆனால் இப்போது கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்தி வைப்புத் தீர்மானம் எதுவாக இருந்தாலும் உறுப்பினர்கள் அதைப் பற்றி எழுப்பி அதை பதிவேட்டிலே பதிவு செய்துகொள்ளலாம் என்று அனுமதித்து வருகிறேன். இன்று வேண்டாம். நாளைக்கு எழுப்புங்கள், பதிவேட்டிலே ஏற்றிக்கொள்ளலாம்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: நாளைக்கு ஏராளமான பில்கள் இருக்கின்றன, அப்படிப்பட்ட சூழ்நிலையில் நீங்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வீர்கள். நாங்கள் கேள்விகளைக் கொடுத்து நாற்பது நாட்களுக்கு மேலாக ஆகிவிட்டன.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இந்த அவையிலே அதை அனுமதிக்கிறேன், நாளைய தினம் அவரவர்கள் சுருக்கமாகச் சொன்னால் பதிவேட்டிலே ஏற்றலாம், பதிவாகட்டும்.

திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம்: நான் இந்த மாதம் ஒன்பதாம் தேதி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

4. உரிமைப் பிரச்சினைகள்—(தீர்ப்பு).

அ. நாளேடுகள் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை நடவடிக்கைகள் பத்திரிகைகளில் வெளிவந்திருப்பது பற்றிய சில அவை உரிமை மீறல் குறித்த அறிவிப்புகள் கொடுக்கப்பட்டு, பேரவையில் எழுப்பப்பட்டன.